## பத்திரிக்கை செய்தி

## லஞ்சம் பெற்றவழக்கில் முன்னாள் கிராமநிர்வாக அலுவலர் மற்றும் தனிநபருக்கு 3 ஆண்டு கடுங்காவல் சிறை.

திருப்பூர் மாவட்டம், PN ரோடு, காட்டன்மில் 2வது வீதியைச் சேர்ந்த அப்புசாமி என்பவரது மகன் திரு.A.P.ஆனந்தன் என்பவர்எலக்ட்ரானிக் கடை வைத்துள்ளார். அவரது சொந்தஊரானஅவினாசி தாலுகா, குன்னத்தூர் அருகில் உள்ள காவுத்தம்பாளையம் கிராமத்தில் ஆனந்தனுக்கு கூட்டாகபாதியப்பட்ட 6.12 ஏக்கர் விவசாயநிலம் உள்ளது. மேற்படி நிலத்தில் 2 1/2 ஏக்கரில் சம்பங்கி பூ மற்றும் 3 ஏக்கர் நிலத்தில் குச்சிகிழங்கு பயிரடகுன்னத்தூர் தோட்டக்கலைத்துறை மூலம் மானியம் பெறவும், மேலும் முறையே தெளிப்பு நீர் பாசனம் மற்றும் சொட்டுநீர் பாசனம் அமைக்கமானியம் பெறவும்அடங்கல், FMB மேப்மற்றும் விண்ணப்பங்களில் VAO சான்றுபெறவேண்டியிருந்ததால் புகார்தாரர் ஆனந்தன்காவுத்தம்பாளையம் கிராமநிர்வாக அலுவலர் (பொறுப்பு விருமாண்டம்பாளையம் கிராமம்)திரு.குணசேகரன் என்பவரிடம் அணுகியபோது லஞ்சமாகபணம் ரூ.1,500/- கேட்டது சம்பந்தமான புகாரின் பேரில் 22.11.2011-ம் தேதி VAO திரு.குணசேகரன் புகார்தாரர் ஆனந்தனிடம் லஞ்சமாக ரூ.1,500/- கேட்டு, திரு.சதீஸ் என்றஓட்டுநர்/தனி நபர் மூலமாக பணம் பெற்றது சம்பந்தமாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினரால் இருவரும் கைது செய்யப்பட்டனர். இவ்வழக்கில் திரு.குணசேகரன ் மற்றும் திரு.சதீஸ் மீது திருப்பூர் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்ற வந்த வழக்கில் 06.02.2025-ம் தேதி திரு.குணசேகரன் VAO-வுக்கு ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 7ன் கீழ் 3 வருடம் கடுங்காவல் சிறை தண்டணையுடன் ரூ.2,000/- அபராதமும், ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 13 (2) r/w 13 (1)(d)ன் கீழ் 3 வருட கடுங்காவல் சிறை தண்டணையுடன் ரூ.2,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. திரு.சதீஸ் தனிநபருக்கு ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 13 (2) r/w 13 (1)(d)மற்றும் 109 இ.த.ச.பிரிவின் கீழ் 3 வருட கடுங்காவல் சிறை தண்டணையுடன் ரூ.2,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.